1981 பிப்ரவரி 2]

திரு. ப. நெடுமாறன்: தலைவர் அவர்களே, வைகை நதியின் வெள்ளத்தின் காரணமாக மதுரையின் ஒரு பகுதியிலே அடிக்கடி சேதம் ஏற்படுகின்றது. ஆகவே மதுரை நகரத்தில் வைகை ஆற்றின் இரு கரைகளிலும் சாலை அமைப்பதன் மூலம் இந்தச் சேதத்தைத் தடுப்பதற்கு அரசு ஒரு திட்டம் வகுத்திருந்ததே அது எப்போது அமல்படுத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, பரீட்சார்த்தமாக சில பகுதிகளில் இப்போது கூட அவ்வாறு போடப்பட்டிருக்கின்றது. அந்த வகையில் தொடர்ந்து நடத்தப் பட வேண்டும் என்றுதான் அரசும் விரும்புகிறது. ஆகவே அதை விரிவுபடுத்துவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

திரு. வ. சத்தியமூர்த்தி: தலைவரவர்களே, வைகை சீரமைப்பு திட்டதின் கீழ் ஆற்றின் அருகிலே இருக்கின்ற கால்வாய்களின் கரைகளிலே மணலைதான் கரையாகப் போட்டிருக்கிறார்கள். ஆகவே சிறிது வெள்ளம் வந்தாலும் அவை சிக்கிரத்தில் அழிந்து விடும் தன்மையில் உள்ளன. எனவே புதிதாகச் சீரமைப்புத் திட்டம் தீட்டி அதனைச் செப்பனிடுகின்றபோது சிமெண்ட் கால்வாய்களாகப் போட்டால் நிரந்தரமான வகையில் அது மக்களுக்குப் பலன் தரும். ஆகவே அந்த வகையில் அமைக்க அரசு திட்டமிடுமா என்பதை விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களை ஏற்கனவே அரசு கவனத்தில் கொண்டு இருக்கின்றது. அந்தக் கால்வாய்கள் நதியை ஒட்டி செல்வதாலோ அல்லது வேறு காரணங்களாலோதான் இவ்வாறு ஏற்படுகின்றது என்பதை அரசு ஆராய்ந்து பார்த்துத்தான் அவைகளை மாற்றியமைக்க வேண்டும் என்ற வகையில் அரசு இப்போது திட்டங்களைத் தயாரித்து வருகின்றது.

சிவகங்கை பகுதியில் பாசன வசதி

*வினா எண். 155 திரு. ச. அங்குசாமி: மாண்புமிகு நீர்பாசானத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கைப் பகுதியில் பெரியாறு பாசன விரிவுப் படுத்தும் வேலைகள் 10 ஆயிரம் ஏக்கருக்கு இன்னும் ஆரம்பிக்க படாமல் தாமதம் ஏற்படுவதற்கு காரணம் என்ன?

(ஆ) எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகம்து ; (அ) மற்றும் (ஆ) சிவகங்கை வட்டத்தில் பெரியாறுபாசனத்தில் புதிய பகுதிகளைச் சேர்ப்பதற்கான ஆயகட்டு நிர்ணய வேலைகள் நடந்து வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1981 பிப்ரவரி 2

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருப்புவனம் வட்டாரத்தைச் சேர்ந்த தேனி, ஏனாதிபோன்ற கிராமங்கள் வைகை பெரியாறு பாசனத்திற்குத் தொடர்பு இல்லாமல் இருக்கின்றன. ஆகவே பெரியாறு பாசனத்தை விரிவுடுத்துகின்றபோது இந்தப் பகுதிகளையும் சேர்த்துக் கொள்ள மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, சிவகெங்கைப் பகுதியிலே இப்படி ஆயக்கட்டு, நான்—ஆயக்கட்டு ஆகிய இரண்டு பகுதிகள் அதாவது பெரியாறு பாசனத்தைப் பெறுகின்ற பகுதிகளுக்குப் பக்கத்திலேயே பாசனத்தைப் பெறாத பகுதிகளும் இருக்கின்றன. மானாமதுரையிலே இப்படிப்பட்ட பகுதிகள் இருக்கின்றன. இப்படி அங்கே பல்வேறு பகுதிகள் இருக்கின்றன. இது பற்றி அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. ஆகவே அவற்றைத் தனித்தனியாக அரசு நிச்சயமாக பரிசீலனை செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த பகுதிகளும் சேர்க்கப்படவில்லை என்பதை அரசு உணர்ந்திருக்கின்றது — அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, பெரியாறு பாசனத்தை விரிவுடுத்துகின்றபோது புதிதாக கிட்டத்தட்ட பத்தாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களை பாசனத்தின் கீழ் கொண்டுவர முடியும் என்று எற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் இதிலே நீண்ட காலதாமதம் எற்பட்டிருக்கின்றது. இந்த கால தாமதத்திற்கு என்ன காரணம்? இதனை விரிவுபடுத்துகின்றபோது கிழக்கு முகவை மாவட்டத்திலே உள்ள பரமக்குடி போன்ற பகுதிகளுக்கும் சேர்த்து விரிவுபடுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, இந்தத் திட்டம் பற்றிய ஒரு திருத்த மதிப்பீட்டை அனுப்ப வேண்டும் என்று உலக வங்கியின் மத்திய நீர்வழிக்கழகம் கேட்டுக் கொண்டதற்கிணங்க விலைவாசி ஏற்றத்தைக் கணக்கிலே கொண்டு 41 கோடி ரூபாய் என்று இருந்த திருத்திய மதிப்பீடு 65 கோடி ரூபாய் என்ற அளவுக்கு வந்தது. மீண்டும் விலைவாசி எற்றத்தைக் கணக்கிலே கொள்ளும்போது அது 72 கோடி ரூபாயாக ஆகி இருக்கின்றது. இது ஒரு முக்கியமான காரணம். மேலும் அதிலே சேர்க்கப்படவேண்டிய பகுதிகள் அல்லது விடப்பட வேண்டிய பகுதிகள் என்று வருகின்றபோது உலக வங்கி தெரிவித்திருக்கின்ற கருத்துக்களின் அடிப்படையிலே சில இடங்களை நாம் சேர்த்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். மேலும் நாமே தயாரிக்கின்ற திட்டத்தின் படியும் இன்னும் கூடுதலாக 20 ஆயிரம் ஏக்கர் சேர்க்கவேண்டி இருக்கின்றது. ஆகவே இவை எல்லாவற்றையும் சேர்த்து ஒட்டுமொத்தமாக நிறைவேற்றினால்

1981 பிப்ரவரி 2]

தான் இதுவரை பாதிக்கப்பட்ட பகுதிகள் எல்லாம் பயன் பெறும் என்ற அடிப்படையில் அரசு தீவிரமாக முயற்சிகளை மேற் கொண்டிருக்கின்றது. இதன் காலதாமதத்தை மத்திய அரசும் உணர்ந்து இருக்கின்றது. எனவே 1981—ஆம் ஆண்டு முடிக்கப் படவேண்டிய வைகைப் பெரியாறு கால்வாய்த் திட்டம் 1984—ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டிருக்கின்றது. 72 கோடி ரூபாய் செலவிலே இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படுவதற் கான வாய்ப்புக்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

(முற்பகல்—10 00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதி யோடு கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

பவானிசாகர் அணையைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு பாசன வசதி

*வினா எண். 156—திரு. கே. ஜி. சுப்பிரமணியன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பவானிசாகர் அணைக்கட்டு சுற்றுப்புறத்தில் சுமார் 7 பஞ்சாயத்துக்கள் அடங்கிய நிலப்பரப்பில் குளத்துப்பாசனம் செய்வதற்குரிய அளவு அணையில் தண்ணீர் விட திட்டம் ஏதும் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது அத்திட்டம் நிறைவேற்றப் படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. தி. கா. நல்லப்பன்: பவானிசாகர் வாய்க்காலிலிருந்து பெற்றிக்குட்டையிலிருந்து கிரேன்நகர், விஜயமங்கலம் வழியாக ஊத்துக்குடிக்கு நொய்யாற்றிலிருந்து வருகிற தண்ணீரைக் கொண்டு அங்குள்ள குளம் குட்டைகளுக்கு தண்ணீர் அளிக்கும் வகையில் ஒரு திட்டம் அரசினிடம் இருக்கிறதா? ஏற்கனவே இது சம்பந்தமாக அரசுக்கு ஏதாவது மனு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மூலக் கேள்வி பவானி சாகர் அணைக்கட்டு சுற்றுப்புறத்தில் சுமார் 7 பஞ்சாயத்துக்கள் அடங்கிய நிலப்பரப்பில் குளத்துப் பாசனம் செய்வதற்குறிய அளவு அணையில் தண்ணீர் விடத் திட்டம் ஏதாவது உண்டா என்பதாகும்.